








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 21 4.06.2026



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

**தானம் வாங்குவதற்கு நியமங்கள்**

(வ்யபிசாரிணீ, நபும்ஸகன், கர்மங்களை விட்டவன் (பதிதன்), எதிரி இவர்கள் தாங்களாகவே கொடுத்தாலும் ஆபத் காலத்திலும் ஒரு போதும் சிறு பொருளையும் (தம்படியும்) வாங்கி கொள்ளக்கூடாது. திருடன், பதிதன், நபும்ஸகன், ஆடம்பரம் பேராசை திமிர் இவைகளோடே இருப்பவன், பகவத் பாகவத பக்தி இல்லாதவன், பகவத் பாகவத அஸஹ்யாபசாரங்களில் ஈடுப்படக்கூடியவன். இவர்களிடமிருந்து அதி அல்பமான பணத்தையும், வாங்கக்கூடாது. மேல் கூறினவர்கள் எல்லாம் அஸத்துக்கள்.)

இப்படி பகவத் சாஸ்த்ரத்திலும் (பாஞ்சராத்ர சாஸ்த்ரம்) தர்ம சாஸ்த்ரத்திலும் சொல்லியிருக்கிற ப்ரதிக்ரஹ (தானம் வாங்கக்கூடிய) நியமத்தை நன்றாக ஆராய வேண்டும். ஆபத் காலத்தில் அஸத்துக்களிடமிருந்து தானம் வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் (தானம் கொடுக்கக்கூடியவர்கள் "அச்யுத: ப்ரீயதாம்" (பகவான் ப்ரீதியை அடைய வேண்டும்) என்கிற மந்த்ரம் சொல்லி தானம் கொடுத்தால் அந்த தானத்தை வாங்கக் கூடியவர்கள் என் ஸமீபம் வர மாட்டார்கள் (நரகத்திற்கு போக மாட்டார்கள்)) என்று யமன் சொன்ன வார்த்தையை சௌனகர் சொன்னதை உச்சரித்து (வாயாலே சொல்லி) தானத்தை வாங்கலாம்.

---

தினந்தோறும் தர்பத்தை அறுத்தால் அது அன்றைக்கு மட்டும் உபயோகப்படும். அதை அடுத்த நாள் உபயோகப்படுத்தக் கூடாது.அமாவாஸ்யையன்று தர்பத்தை க்ரஹித்தால் (அறுத்தால்) அதை ஒரு மாதம் உபயோகப்படுத்தலாம். ஆவணி மாதம் அமாவாஸ்யையன்று அதை க்ரஹித்தால் ஒரு வருஷத்திற்கு வைத்து கொள்ளலாம். மஹாளய அமாவாஸ்யையன்று க்ரஹித்தால் ஆறுமாதம் வைத்துக் கொள்ளலாம். மாகமாதம் அமாவாஸ்யையன்று க்ரஹித்தால் ஆறுமாதம் வைத்துக் கொள்ளலாம்.

---

அஹங்காரத்துடன் இருப்பவர்கள். தங்களையே தாங்கள் ஸந்தேஹிக்கக் கூடிய வர்கள். பெரியவர்களிடத்தில் திரஸ்கார புத்தியை உடையவர்கள். குருக்களை வணங்காதவர்கள், மூர்க்கர்கள் தாங்கள் செய்யும் வர்ணாச்ரம தர்மங்களை அஹங்காரத்தினால் பகவானிடம் அர்பணம் பண்ணாதவர்கள் அதாவது ஸரி என்று சொல்லாதவர்கள், மற்றவர்களை கோபித்துக் கொள்ளக் கூடியவர்கள். தங்களிடம் இருக்கும் செல்வத்தின் செருக்காலே மற்றவர்களை நித்யம் அவமதிப்பவர்கள், கள்ளை குடிப்பவர்கள், கண்டதெல்லாம் தின்னக் கூடியவர்கள், க்ரூரமாக பேசக் கூடியவர்கள். அப்ரியமான வார்த்தைகளை சொல்லக் கூடியவர்கள். இவர்களை யமன் தண்டிக்கிறான். மேல் கூறினதில் பதினெட்டு அம்சங்கள் இல்லை. மேற்கூறிய குணங்கள் நம் சரீரத்தில் இருந்தால் சண்டாளத்வம் இருப்பதாக எண்ண வேண்டும்.

# காயத்ரீ மந்த்ரம்

இம்மந்த்ரம் காயத்ரீ என்பது மந்திரத்தின் பெயர். இது ஸந்த்யாவந்தன காலங்களில் ஜபிக்கப்படுவதாகும். "ஸாவித்ரீ" என்றும் கூறப்படுகிறது. "ஸவிதா" ஸூர்யதேவதை இந்த மந்திரத்தால் தூண்டப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது. இங்கு கூறப்படும் ஸூர்யதேவதை ப்ரஹ்மா- விஷ்ணு-ஸ்வாத்மகமாக மூன்று தேவதைகள் வடிவான பரமாத்மாவாகும். அவர் நமக்கு வாழ்வையும் அறிவையும் கொடுப்பதால் அவர் ஸவிதா என அழைக்கப்படுகிறார். ஸவிதா என்ற இவ்வார்த்தை உயிர்களைப் படைத்தல் எனும் பொருள் கொண்ட "ஷூ ஞ்" எனும் வினையிலிருந்து தோன்றியது.

"காயத்ரீ" என்பது "சந்தஸ்" ஸைக் (Metre) குறிக்கும், இது மூன்று பாதங்களையும் ஒவ்வொரு பாதங்களிலும் எட்டு சீர்களையும் (syllable) கொண்டதாகும். ஆக மொத்தம் 24 சீர்களைக்கொண்டது. இது மிகவும் ப்ரஸித்தமான மந்த்ரமாக உள்ளதால், வேதம் கற்பதற்கு முன் கற்பிக்கப்படுகிறது. அமைப்பைக்கொண்டு இதன் "காயத்ரீ" "சந்தஸ்" என்று வழங்கப்படுகிறது. ஆனால் இம்மந்த்ரம் முதல் பாதத்தில் ஒரு சீர் குறைவாக விளங்குகிறது. எனவே "நிச்ருத் காயத்ரீ" என்றே வழங்கப்படுகிறது. ஆயினும் வேதத்தில் இது 24 சீர்களைக் கொண்டதாகவே கருதப்படுகிறது.

சாந்தோக்ய உபநிஷத்தில் காயத்ரியின் மூலம் ப்ரஹ்மோபாஸனம் உபதேசிக்கப்படுகிறது. காயத்ரீ மந்த்ரம் யாக யக்ஞாதிகளிலும் முக்ய மந்த்ரமாகக் கொள்ளப்படுகிறது. கானம் செய்யப்படுவதாலும், காப்பதாலும், "காயத்ரீ" என வழங்கப்படுவதாக வேதம் கூறுகிறது. காயத்ரீ குணப்படுத்துவதாகவும் விளங்குகிறது. தேஜஸாகவும்,

காயத்ரீ வேதஸாரமாகும். ராமாயணமும் வேதஸாரமே. ராமாயண ஸ்லோகங்களில் ஒவ்வொரு ஆயிரத்திலும் காயத்ரீ அக்ஷரங்கள் புதைந்துள்ளன. எனவே இவ்விதமான இந்த இருபத்து நான்கு அக்ஷரங்களடங்கிய ஸ்லோகத்தொகுப்பு எனப்படுகிறது. "காயத்ரீ ராமாயணம்" எனப்படுகிறது.

காயத்ரீ மந்த்ரம் ஊக்கத்துடன் ஜபிக்கப்படவேண்டிய மந்த்ரமாகும். தினமும் இது ஐந்து பகுதிகளைக்கொண்டது. முதல் பகுதி ப்ரணவம், இரண்டாம் பகுதி வ்யாஹ்ருதி, மற்ற மூன்று பகுதிகளும் மந்த்ரத்தின் மூன்று பாதங்களாகும்.

ப்ரணவம் மூன்று சீர்களைக் கொண்டது. இது ஜீவனின் ஸூஷூப்தி, ஜாக்ரதா, ஸவப்னம் என்ற மூன்று நிலைகளைக் கொண்ட பரமாத்ம நிலையைக் குறிக்கிறது. வ்யாஹ்ருதிகள் மூன்றும் மேல் - நடு மூவுலகையும் வேதங்களையும் குறிக்கிறது. கீழ் என்ற "பூஷா" தேவதை அஜ்ஞானத்தை போக்க வேண்டப்படுகிறது. அதனால் உள்ளே உறையும் ஆத்மாவைக் காண முடிகிறது. இந்த மந்த்ரம் மேலும் விஸ்வாமித்ரரால் கண்டுறைக்கப்பட்டது. வேதங்களிலும் உள்ளது. இதைக் கடுமையாக உபாஸித்த விஸ்வாமித்ரர் ப்ரஹ்மர்ஷி என்ற பட்டத்தைப் பெற்றார்.

காயத்ரீ வேதங்களின் தாய் எனப் போற்றப்படுகிறது. இது நமது வேத ஞானத்தை வலுவூட்டுகிறது.காயத்ரி மந்த்ரத்தால் நாம் ப்ரஹ்மத்தின் ஒலிவடிவை உபாஸனை செய்கிறோம். ஸவிதா தேவதை நமது மூளயைத் தூண்டுகிறது. அது நமக்கு வாழ்வை அளிக்கிறது. நமது அறிவுத் திறனை ஊக்குவிக்கிறது. எனவே கடவுள் நம்மைக் காக்கவிழையும்போது காயத்ரீ மூலம் அறிவையும் நல்லவற்றையும் அளிக்கிறார்.

பசுக்களைக் மாடுமேய்ப்பவன் கோலைக்கொண்டு காப்பது போல கடவுள் தனியொருவனைக் காப்பதில்லை. மாறாக காக்க வேண்டியவனுக்கு அறிவையும் நல்லவற்றையும் கொடுத்து அதன் மூலமே காக்கிறார்.

**न देवाः दण्डमादाय रक्षन्ति पशुपालवत् ।**

**यं हि रक्षितुमिच्छन्ति बुद्धया संयोजयन्ति तम् ॥**

ஆக மொத்தம் காயத்ரீயை உபாஸனை செய்வதால் அதன் மூலம் நம்மைக் காக்கிறார்.

*********************************************************************

